மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
O.S.NO. 113/2008

8.03.2019

குறுக்கு விசாரணை

வா.சா. 1 – சக்திவேல், த/பெ. நாச்சிமுத்து

6 ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை

நான் முதல்விசரணையில் கூறியுள்ள கனகா என்பவர் என் தகப்பனாரின் 2 ம் மனைவி. அவர்களுக்கு எப்போது திருமணம் ஆனது என்று தெரியாது. நான் குழந்தையாக இருக்கும்போதே என் தகப்பனார் 2 ம் திருமணம் செய்து கொண்டார். கனகாவை 2 ம் தாரமாக என் தகப்பனார் கட்டி கொண்டார். அவருடைய முதல் தாரத்தின் பெயர் ஈஸ்வரி. ஈஸ்வரி தான் முதல் தாரம் என்பதை காண்பிக்க ஏதாவது ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. என் அம்மா ஈஸ்வரி ஜீவனாம்ச வழக்கு தாக்கல் செய்து நாச்சிமுத்து கவுண்டர் அதில் அவருக்கு ஜீவனாம்சம் வழங்கி வருகிறார். கனகா தான் நாச்சிமுத்து கவுண்டரின் மனைவி என்றும், ஈஸ்வரி மனைவி அல்ல என்றும் 6 ம் பிரதிவாதி சொல்கிறார் என்று சொன்னால் சரியல்ல. ஈஸ்வரி தான் முதல் மனைவி என்று சொன்னால் நாச்சி முத்து கவுண்டரின் ஈஸ்வரியும் எப்போது பிரிந்தார்கள் என்றால் நான் 1 வயது குழந்தையாக இருக்கும்போதெ பிரிந்து விட்டார்கள். ஈஸ்வரியும் நாச்சிமுத்து கவுண்டருக்கும் திருமணம் ஆனது என்றும் அவர்கள் கணவன் மனைவி என்பதை காட்ட எந்தவித ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும், நான் எனது தாத்தா ராயப்பா கவுண்டரின் அரவணைப்பில் தான் எனக்கு விபரம் தெரிந்த நாளில் இருந்து வளர்ந்து வருகிறேன். தற்போது எனது தகப்பனார் சுக்கம்பாளையத்தில் கனகா மற்றும் கனகாவின் குழந்தைகளுடன் வாழ்ந்து வருகிறார். தற்போது எனது தகப்பனாருக்கு சொத்துபத்துகள் உள்ளது என்றால் வழக்கு சொத்தை விற்று வந்த பணத்தில் கனகா பெயரில் சொத்து வாங்கியுள்ளார். பூமி வாங்கி அனுபவித்து வருகிறார். வழக்கு சொத்தை விற்ற பணத்தில் வாங்கியதால் கனகா பெயரில் உள்ள சொத்திலும் எனக்கு உரிமை இருக்கிறதா என்றால் எனக்கு தெரியாது. என் தகப்பனார் நாச்சிமுத்து கவுண்டரின் அப்பா பெயர் என்ன என்றால் மாரப்ப கவுண்டர். மாரப்ப கவுண்டர் தான் முதன்முதலில் தனது மகன் நாச்சிமுத்து கவுண்டர் எல்லா சொத்தையும் அனுபவித்து வருவதாகவும், தனக்கு பாகம் வேண்டும் என்றும் திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் முதன்முதலாக வழக்கு போட்டார் என்றால் சரிதான்.

Sd/- சக்திவேல்,

வழக்கு சொத்தை விற்று விட்டதனால் அந்த வழக்கை தள்ளுபடி செய்ய விட்டு விட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மாரப்ப கவுண்டரும் அவரது அண்ணன் மனைவியும் பிதுரார்ஜித சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மாரப்ப கவுண்டருக்கு பாகப்பிரிவினையில் வந்த சொத்துக்கள் தான் 8 ஏக்கர் தாவாசொத்துக்கள் என்றால் சரிதான். மாரப்பகவுண்டரின் பாகப்பிரிவினைக்கு முன்பே மயிலாத்தாள் , லட்சுமி ஆகியோர்கள் பிறந்து விட்டனர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனவே மாரப்ப கவுண்டரின் சொத்தில் மயிலாத்தாள், லட்சுமி, மாரப்ப கவுண்டர், நாச்சிமுத்து கவுண்டர் ஆகியோர்களுக்கு சொத்தில் பங்கு இருக்கிறது என்றால் சரிதான். 2005 சட்டம் வந்தபிறகு லட்சுமி மாரப்ப கவுண்டரின் சொத்தில் தனக்கும் பங்கு இருப்பதாக திருப்பூர் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 50/2011 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கை நான் தாக்கல் செய்த பிறகு தான் மேற்படி அ.வ.50/2011 தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த எதிர்வழக்குரையில் அ.வ.50/2011 பாகப்பிரிவினை வழக்கு பற்றி லட்சுமி முதலானோர் சொல்லியிருக்கிறார்கள் என்றால் சரிதான். அதில் மாரப்பகவுண்டர், நாச்சிமுத்து கவுண்டர், லட்சுமி மற்றும் மயிலாத்தாள் ஆகியோர்களுக்கு தலா ¼ பாகம் என தீர்ப்பானது என்றால் சரிதான். நாச்சிமுத்து கவுண்டரின் பாகத்தை சுப்பிரமணியம் மற்றும் மல்லிகா தர்மராஜ் ஆகியோர்கள் வாங்கியதால் அவர்களுக்கும் நாச்சிமுத்து கவுண்டரின் ¼ பாகம் என தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். அதில் தான் எங்களுக்கு பாகம் வர வேண்டும். அ.வ, 50/2011 மற்றும் இந்த 113/2008 என்ற வழக்கையும் ஒன்றாக சேர்த்து நடத்த வேண்டும் என்று மாவட்ட நீதிமன்றத்தில் 6 ம் பிரதிவாதி மல்லிகா தர்மராஜ் மாறுதல் மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த மாறுதல் மனுவின் என் தரப்பில் இதே வழக்கறிஞர் திரு.சுரேஷ்குமார் ஆஜரானார் என்றால் சரிதான். அ.வ,50/2011 லட்சுமி போட்ட வழக்கில் எனக்கு சொத்தில் உரிமை இருந்தால் தரப்பினராக சேர்த்திருப்பார்கள் என்றும், சொத்தில் உரிமை இல்லாத காரணத்தினால் தான் அந்த வழக்கில் என்னை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் நான் இருப்பதை மறைத்து வழக்கு போட்டு விட்டார்கள். அந்த வழக்கில் எங்களை தரப்பினராக சேர்க்க சொல்லி மனு எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். எங்களையும் அந்த வழக்கில் சேர்க்க சொல்லி வழக்கறிஞரிடம் சொல்லியிருக்கிறேன்., நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. நான் நாச்சிமுத்து கவுண்டருக்கு தான் நான் பிறந்தேன் என்று பிறப்பு சான்றிதழில் சொல்லியுள்ள விபரத்தை சொன்னது யார் என்றால் எனது அம்மாவின் அப்பா ராயப்ப கவுண்டர் தான் சொன்னார்.

Sd/- சக்திவேல்,

அதன் பின்னர் மாரப்ப கவுண்டர் என்னை வந்துபார்த்தார். தேதி ஞாபகமில்லை. மாரப்ப கவுண்டர் என்னை வந்து பார்த்த விபரத்தையும், வழக்குரையில் சொல்லவில்லை. நாச்சிமுத்து கவுண்டர் 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்த கிரயப்பத்திரங்களை செல்லாது என்று இந்த வழக்கில் எந்த பரிகாரம் கேட்கவில்லை என்றாலும், அந்த பத்திரங்கள் என்னை கட்டுப்படுத்தாது என்றும், நான் பரிகாரம் கேட்கவில்லை என்றாலும் என் வழக்கறிஞருக்கு தான் அதுபற்றி தெரியும். 1956 இந்து வாரிசுரிமை சட்டம் அமலுக்கு வந்தபிறகு சொத்தில் மாரப்பகவுண்டர், லட்சுமி, நாச்சிமுத்து, மயிலாத்தாள் ஆகியோர்களுக்கு மட்டுமே சொத்தில் உரிமை என்றாலும், எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. நாச்சிமுத்து கவுண்டரின் மகன் என்பதால் எனக்கு சொத்தில் உரிமை இருக்கிறது. சொத்தில் உரிமை இல்லை என்பதால் தான் அ.வ.50/2011 என்ற வழக்கில் என்னை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. என்னை ஏமாற்றி வழக்கு தாக்கல் செய்து விட்டார்கள். மேற்படி வழக்கு இருக்கும் விபரம் தெரிந்தும் அதில் சொத்தில் உரிமை இல்லாத காரணத்தில் தான் தரப்பினராக சேர்ந்து கொள்ள நான் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சொத்தை 4 பாகங்களாக பிரிக்க இறுதிநிலை தீர்ப்பாணை மனு அசல் வழக்கு 50/2011 ல் நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான். நாச்சிமுத்து கவுண்டரின் சொத்தில் கிரயம் செய்த விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 2008 ல் என் தகப்பனார் பவர் எழுதி கொடுத்ததாக சொன்னார்கள். நான் உடனே பத்திர பதிவு அலுவலகத்தில் நகல் எடுத்து பார்த்தபோது சொத்து கிரயம் செய்யப்பட்ட விபரம் தெரியவந்தது. அந்த கிரயப்பத்திரத்தின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். ஒருவருக்கு அறுதியாக பாத்தியப்பட்ட சொத்தை அவர்கள் யாருக்கு வேண்டுமானாலும் கிரயம் செய்து கொடுக்க உரிமை இருக்கிறது என்றாலும், நான் மூத்த குடியின் மகன் என்று சொல்லி கொண்டாலும் சொத்தில் எந்தவித உரிமையும் ஏற்படாது என்றாலும் அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க 9ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/- சக்திவேல்,

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-S.Indulatha, 8.3.2019

மாவட்ட உரிமையியல் நீதிபதி
பல்லடம்